


**25. 08. 2025**

## தலைப்பு செய்திகள்

1. சைபர் மற்றும் தரவு பாதுகாப்பு பிரிவுகளில் ஃபிஜி நாட்டுடன் நமது அனுபவத்தை பகிர, இந்தியா தயாராக உள்ளது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. அரசியல் சாசனத்தின் 130ஆவது சட்ட திருத்த மசோதா தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு தனது பணியை மேற்கொள்ளும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. தமிழக அரசின் சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.

4. கிருஷ்ணகிரி அணை நிரம்பும் தருவாயில் இருப்பதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. பாரீசில் நடைபெறும் உலக பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் லக்ஷயா சென் - சீனாவின் **Yu Qi Shi –**ஐ இன்று எதிர்கொள்கிறார்.

## இனி விரிவான செய்திகள்

*************

### பிரதமர் - ஃபிஜி

சைபர் பாதுகாப்பு, தரவு பாதுகாப்பு பிரிவுகளில் நமது அனுபவத்தை ஃபிஜி நாட்டுடன் பகிர, இந்தியா தயாராக இருப்பதாக, பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஃபிஜி பிரதமர், Sitiveni Rabuka-வுடன், இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் பேசிய பிரதமர், சமூக நலத்திற்கு பெரும் சவாலாக தீவிரவாதம் திகழ்கிறது என்பதை இருநாடுகளும் ஒருமனதாக ஒப்புக்கொள்வதாக எடுத்துரைத்தார்.

பாதுகாப்பு மற்றும் ராணுவ பிரிவுகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இருநாடுகளும் முடிவுசெய்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்கான செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், ∴பிஜி நாட்டின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த தேவையான பயிற்சிகளையும், தளவாடங்களையும் இந்தியா வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

மொழி தொடங்கி கலாச்சாரம் வரை இருநாடுகளின் நட்புறவும் மேலும் வலுப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர், பரஸ்பர கல்வி சார்ந்த பரிவர்த்தனைகளும் இடம்பெறும் என்றார்.

∴பிஜி நாட்டின் முக்கிய அச்சுறுத்தலாக காலநிலை மாற்றங்கள் திகழும் நிலையில், அதுசார்ந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, குறிப்பாக சூரிய எரிசக்தி பிரிவில் இருநாடுகளும் இணைந்து செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

பேரிடர் மீட்பு பணிகளில் ∴பிஜி நாட்டின் திறன்களை வலுப்படுத்துவதற்கான உதவிகளை இந்தியா வழங்கும் என்றும் பிரதமர் கூறினார்.

இரு நாடுகளுக்கிடையே சுகாதாரம், தர நிர்ணயம், திறன் கட்டமைப்பு, ஆக்கப்பூர்வமான திட்டங்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

∴பிஜி பிரதமர், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் சந்தித்து பேச உள்ளார்.

*************

**பிரதமர் - குஜராத்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை இன்று தொடங்கிவைத்து உரையாற்றுகிறார்.

*************

**அமித்ஷா**

130ஆவது அரசியல் சாசன சட்ட திருத்த மசோதாவிற்கு எதிராக எதிர்கட்சிகளின் போராட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அமைச்சர் அளித்த பேட்டியில், எதிர்கட்சி தலைவர்கள் சிறையில் இருந்தே, அரசை அமைக்கவும், அதனை நடத்தவும் முற்படுவதாக குற்றம் சாட்டினார்.

இவ்விஷயத்தில் எதிர்கட்சிகளின் போராட்டம் ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று அவர் கூறினார்.

பிரதமரின் அலுவலகத்தையும், இம்மசோதாவின் கீழ் கொண்டுவர பிரதமரே அறிவுறுத்தியதாக திரு.அமித்ஷா எடுத்துரைத்தார்.

இந்திய மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தை சுட்டிக்காட்டிய அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இரண்டு ஆண்டுகளோ அதற்கு மேற்பட்டோ சிறை தண்டனை பெற்றால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

130ஆவது சட்ட திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தை எதிர்கட்சிகள் புறக்கணித்தது குறித்து பதில் அளித்த அமைச்சர், எஞ்சியுள்ளவர்களை கொண்டு, இக்குழு தனது பணியை நிறைவேற்றும் என்று கூறினார்.

முன்னாள் குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், தனிப்பட்ட உடல்நல பிரச்சனைகளால் அவர் தமது பதவியை ராஜினாமா செய்ததாகவும் எனவே இதனை எதிர்கட்சிகள் பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை என்றும் திரு.அமித்ஷா குறிப்பிட்டார்.

*************

**முருகன்**

தேமுதிக நிறுவனர் விஜயகாந்தின் பிறந்த தினத்தை ஒட்டி அவரது நினைவுகளை போற்றுவோம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் உயரிய நோக்கத்தோடு செயல்பட்டவர் விஜயகாந்த் என்றும், மக்கள் பணிகளால் அனைவரின் இதயத்திலும் நீங்கா இடம் பெற்றார் என்றும் புகழாரம் சூட்டினார்.

சட்டமன்ற எதிர்கட்சி தலைவராக சிறப்பாக செயலாற்றிய விஜயகாந்த் அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் பிடித்த திரைப்பட கலைஞர் என்று கூறியுள்ளார்.

*************

**மேஜர் சரவணன்**

கார்கில் போரில் வீர மரணம் அடைந்த திருச்சியை சேர்ந்த மேஜர் சரவணன் குடும்பத்திற்கு ராணுவத்தின் சார்பில் இன்று நினைவு பரிசு வழங்கப்பட்டது.

ராணுவ வீரர்களின் தியாகத்தை நினைவு கூறும் வகையில், அவர்களது சொந்த ஊர்களுக்கு சென்று நினைவு பரிசு வழங்கப்படும் என்று ராணுவம் அறிவித்திருந்த நிலையில், மேஜர் சரவணன் குடும்பத்திற்கு இன்று நினைவு பரிசு வழங்கப்பட்டது.

*************

**முதலமைச்சர்**

தமிழக அரசு புதிதாக நிறுவிய சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

அச்சு தொலைக்காட்சி, வானொலி, இணைய ஊடகங்களில் வாய்ப்பு அளிக்கும் வண்ணம் பாட திட்டம் இதில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் மின்னணு ஊடக பயிற்சி, காட்சி தொடர்பியல் திறன் உள்ளிட்ட பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

*************

**முதலமைச்சர் - காணொலி**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று தொடங்கிவைத்தார்.

இதன்படி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் 174 கோடி ரூபாய் மதிப்பிலான 19 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலைய கட்டிடங்கள்,

உயர்கல்வித்துறை சார்பில் 51 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கல்வி சார் கட்டிடங்கள், புத்தாக்க வளர்மையம், உள்ளிட்டவை இதில் அடங்கும்.

தரமணி, எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான புனரமைக்கப்பட்ட படபிடிப்பு தளத்தையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 89 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் இன்று வழங்கினார்.

*************

**யாழ்பாணம்**

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட படகுகள், யாழ்பாணம் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்ட நிலையில், அவற்றை மீட்பதற்காக ராமேஸ்வரத்தை சேர்ந்த 14 பேர் கொண்ட மீனவ குழுவினர் இன்று அங்கு சென்றுள்ளனர்.

இலங்கை அரசின் அனுமதியின்பேரில் அங்கு சென்றுள்ள விசைபடகு மீனவ சங்க தலைவர் ஜேசுராஜா தலைமையிலான இக்குழுவினர், இன்றுமாலை இப்படகுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அதனை தமிழகம் கொண்டுவருவதற்கான பணிகளை ஆராய உள்ளனர்.

இதற்காக இக்குழுவினர் யாழ்பாணத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து படகுகளின் தரத்தையும், உறுதிதன்மையையும் எஞ்சினில் ஏற்பட்ட பழுதையும் மதிப்பிட்ட பின்னர் நாளைமாலை மீண்டும் ராமேஸ்வரம் திரும்ப உள்ளனர்.

*************

**தென்பெண்ணை**

தென்பெண்ணை ஆற்றின் கரையோரங்களில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக 52 அடி கொள்ளளவு கொண்ட கிருஷ்ணகிரி அணை நிரம்பும் தருவாயில் இருப்பதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்.**

*************

**விநாயகர் சதுர்த்தி**

விநாயகர் சதுர்த்தி நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய வடிவங்களில் தயாரிக்கப்பட்ட விநாயகர் சிலைகளின் விற்பனை களைகட்டியுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் விநாயகர் சிலைகள் தயாரிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*************

**ட்ரோன் பயிற்சி**

தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் சென்னையில் 3 நாள் ட்ரோன் பயிற்சி அடுத்த மாதம் 9ஆம் தேதி தொடங்குகிறது.

இதில் ட்ரோன்களின் வகைகள் அதன் செயல்பாடுகள் பராமரிப்பு முறை, கண்காணிப்பு உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படும்.

கூடுதல் விவரங்களுக்கு editn.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம்.

*************

**இருவரி**

**சிவகங்கை மாவட்டம் கீழ செம்பொன்மாரி** கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நாற்றங்கால் பண்ணையை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி அறிவுறுத்தியுள்ளார்.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர்** அலுவலகத்தில் ஆட்டோ வாகனங்களுக்கு QR Code விரைவு தகவல் குறியீடு ஒட்டும் முகாமை ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

*************

**நவகிரக சிலை**

திருப்பத்தூர் வாணியம்பாடி கொடையாஞ்சி பாலாற்றில் நவகிரக சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வருவாய் துறையினர் இதுதொடர்பான விசாரணையை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*************

**பேட்மிண்டன்**

பாரீசில் நடைபெறும் உலக பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் லக்ஷயா சென் - சீனாவின் **Yu Qi Shi** –ஐ இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் **Rutaparna, Swetaparna** இணை – பல்கேரிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**